கிரஸ் முன்னாள் பொதுச் செயலாளர் சொக்கலிங்கம்.

## 'புறக்கணிக்கப்பட்ட' கட்டுரை?

கடந்த புதனன்று கோலாகலமாகக் கோவையில் துவங்கிய உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு வருகிற ஞாயிறன்று நிறைவு பெறுகிறது. ஆய்வரங்கம், கவியரங்கம், கலைநிகழ்ச்சி எனக் களை கட்டும் இந்த செம்மொழி மாநாட்டிற்கு ஆயிரக்கணக்கானோர் ஆய்வுக் கட்டுரைகள் அனுப்பினர். இவற்றில் தகுதியானவை தேர்ந்தெடுக்கப்பட்டு ஆய்வரங்கத்தில் வாசிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. முகப்பரங்கம், கலந்தாய்வரங்கம், பொழிவரங்கம், கலந்துரையரங்கம் மற்றும் 234 அமர்வுகளில் நடக்கின்றன ஆய்வரங்கங்கள்.

இந்த ஆய்வரங்கங்களில் பங்கேற்பதற்காக ஆங்கில மொழிச் சொற்களுடன் ஆயிரக்கணக்கான தமிழ் வேர் சொற்களை ஒப்பாய்வு செய்து, 'ஆதித் தமிழே ஆங்கிலமாயிற்று' என்ற விரிவான ஆய்வுக் கட்டுரையை தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை அருகேயுள்ள திருச்சிற்றம்பலத்தைச் சேர்ந்த அ.கோவிந்தன் என்பவர் செம்மொழி மாநாட்டு ஒருங்கிணைப்பாளருக்கு அனுப்பியிருக்கிறார்.

கோவிந்தனின் கட்டுரையை ஆய்வு செய்த தமிழறிஞர்கள் பலரும் 'இக்கட்டுரை ஒன்றே செம்மொழி மாநாட்டின் பெருமையை நிலைநாட்டுவதற்குப் போதுமானது' என்று பாராட்டுகின்றனர். ஆனால், மாநாட்டு ஒருங்கிணைப்பாளரோ இக்கட்டுரையைக் கண்டு கொண்டதாகத் தெரியவில்லை. மாறாக செம்மொழி மாநாட்டிற்குப் பார்வையாளராக மட்டுமே அழைக்கப்பட்டிருக்கிறார் கோவிந்தன்.

உலகமெல்லாம் பேசப்படும் ஆங்கிலம், தமிழ் மொழியிலிருந்தே தோன்றியது என்பதற்கான ஆதாரமாக விளங்கக்கூடிய இந்தக் கட்டுரையை செம்மொழி மாநாட்டு ஒருங்கிணைப்பாளர் புறக்கணித்தது ஏனோ?

## விரட்டும் கல்லூரி முதல்வர்?

சென்னையில் இருக்கிறது பிரபலமான எத்திராஜ் கல்லூரி. இங்கு அட்மிஷன் கிடைத்த மாணவிகள் பணம் கட்டி சேர்ந்து விடுகிறார்கள். தங்களது டி.சி.களையும் கொடுத்து விடுகிறார்கள். அதே மாணவிக்கு கல்லூரி திறக்கும் முன்பே வேறு கல்லூரியில் நல்ல கோர்ஸ் கிடைத்தால் எத்திராஜ் கல்லூரிக்கு வந்து டிரான்ஸ்ஃபர் சர்டிஃபிகேட் கேட்டு மனு போடுகிறார்கள். ஆனால் அந்த மனுவை வாங்கவே இரண்டு மூன்று நாட்கள் இழுத்தடிக்கிறார்கள். பிரின்ஸிபாலை சந்திக்க வேண்டும் என்றால் கூட அங்கிருக்கும் அவரது செகரட்டரி உள்ளே விடவே மறுத்து அடம்பிடிக்கிறாராம். இதனால் டிரான்ஸ்ஃபர் சர்டிஃபிகேட் கேட்டுப் போகும்



விசிறி வழங்கும் காங்கிரஸார்.

மாணவிகளின் பெற்றோர்கள் அவஸ்தைப் படுகிறார்கள். இந்த 'முதல்வரின் செயலாளரையும்' மீறி பிரின்ஸிபாலை சந்தித்தால் அவரும் மாணவிகளுக்கு உள்ள அவசரத்தைப் புரிந்து கொள்ள மறுத்து வீண் காலதாமதம் செய்கிறார் என்று பெற்றோர்கள் பலரும் புகார் செய்கிறார்கள். 'ஒரு மகளிர் கல்லூரி முதல்வருக்கு மாணவிகளின் நலன் மிகவும் முக்கியம். அதை விட அந்த மாணவிகளின் பெற்றேரையும் மரியாதையாக நடத்த வேண்டும் என்பது முக்கியம். கல்லூரி முதல்வருக்கு சம்பந்தப்பட்ட கல்லூரி நிர்வாகம் அட்வைஸ் பண்ணுமா?' என்பதே பெற்றோரின் எதிர்பார்ப்பாக இருக்கிறது.

## தேவர் 'சமாதி' போராட்டம்!

பசும்பொன் முத்துரமலிங்கத் தேவரின் சொத்துக்களை அனுபவிப்பதில் வாரிசு சண்டை இருந்து வந்தது. நீதிமன்றத்திலும் வழக்கை சந்தித்தார்கள். இதற்கிடையே அந்த வழக்கில் ஒரு தரப்பு வெற்றி பெற்றது. ஆனால் வெற்றி பெற ஒன்றாக இருந்து போராடியவர்களுக்குள்ளேயே தற்போது கருத்து வேறுபாடு வந்துவிட்டதாம். சமாதியைப் பராமரிக்கும் உரிமை யாருக்கு சொந்தம் என்பதே புதிய போராட்டம். உள்ளுக்குள்ளேயே கருத்து வேறுபாடு இருக்கும் சூழ்நிலையைப் பயன்படுத்தி தேவர் சமாதியை அரசு கையகப்படுத்த வேண்டும் என்று அரசுக்கு ஆலோசனை சொல்லியிருக்கிறாராம் ஆளுங்கட்சியைச் சேர்ந்த ஒரு எம்.எல்.ஏ.

## தாய்க் குலத்திற்கு 'இலவசம்'

முதலமைச்சர் கருணாநிதி கதை, வசனம் எழுதிய பெண் சிங்கம் திரைப்படம். மதுரையில் இந்தப் படத்தைக் காண வரும் தாய்க்குலத்திற்கு அந்தந்த ஏரியா ஆளுங்கட்சி பொறுப்பாளர்கள் இலவசமாகவே டிக்கெட் வழங்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். பெண்களுக்கு மட்டுமே அந்த சலுகை என்பதால் தாய்க் குலத்தின் கூட்டம் அதிகம் வருகிறதாம்.

◆